

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோர்ப்பரேஷன்



Registered as a News paper in Ceylon விலை சதம் 10.

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 10 [2-6-68 இதழ் 112

யாழ்ப்பாணம்கிலகவை ஆசி 20ரபி; அவ்5ஞாயிற்றுக்கிழமை





இன்றே
விஜயம் செய்யுங்கள்
ம. சே. ஜுதிராஜா
பல் கட்டுபவர் கண்பரிசோதகர்
9. மெயின் வீதி - யாழ்ப்பாணம்.


மாவட்டசபை

# வெள்ளையறிக்கை 5-ந் திகதி; விவாதம் 8-ந் திகதி

## வெளிநடப்புச்செய்ய எதிர்க்கட்சியினர் திட்டம்

கொழும்பு, சனி

மாவட்டசபைபற்றிய வெள்ளை அறிக்கை இம்மாதம் 5-ந் திகதி ஜனப்பிரதிநிதிகள்சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. வெள்ளை அறிக்கை இம்மாதம் 5-ந் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படுமென்றும் வெள்ளை அறிக்கைமீது 8-ந் திகதி விவாதம் ஆரம்பமாகுமென்றும் சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வா, சகல எதிர்க்கட்சி அங்கத்தவர்களுக்கும் அறிவித்திருக்கிறார்.

### தமிழரசார் திருப்தி

ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தயாரித்து முடித்துள்ள வெள்ளை அறிக்கையை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பரிசிலனை செய்ததாகவும் அவர்கள் அதில் திருப்தியடைந்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

### எதிர்க்கட்சி தீர்மானம்

மாவட்டசபை வெள்ளை அறிக்கை ஜனப்பிரதிநிதிகள்சபையில் சமர்ப்பிக்கப்பட்டதும் அதை பகிஷ்கரிப்பதென எதிர்க்கட்சியினர் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. இம்மாதம் 5-ந் திகதி சபையில் வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் எதிர்க்கட்சியினர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்வார்களென எதிர்க்கட்சி வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வெளிநடப்பின் தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயகாவும் சேர்ந்துகொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. சபையிலிருந்து வெளி நடப்புச் செய்து, மாவட்ட சபையை எதிர்த்துப் பொதுக் கூட்டம் ஒன்று நடத்தவும் அவர்கள் திட்டமிட்டுள்ளார்களாம். கொழும்பில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு எதிர்க்கட்சிக்

[8-ம் பக்கம் பார்க்க]

## 'சுந்தரரின்மறு அவதாரம் சேக்கிழார்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

"சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையை முதலில் பாடினார். இதனையே விரிவாக சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணமாகப் பாடினார் ஆதலால் சேக்கிழார் சுவாமிகளை சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மறு அவதாரமென்று சொல்ல இடமுண்டு."

இவ்வாறு நேற்று ஆரம்பமான சேக்கிழார் விழாவின் காலை நிகழ்ச்சியில் பேசிய பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தின் ஆதரவில் நேற்று ஆரம்பமான சேக்கிழார் விழாவின் காலை நிகழ்ச்சியாக சேக்கிழார் குருபூசை நடைபெற்றது. இக் குருபூஜை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது.

சேக்கிழார் குருபூசையில் திரு. மு. ஞானப்பிரகாசம் மேலும் பேசியதாவது:-

சமயாசாரியரில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இறைவன் புகழையும், சுந்தரமூர்த்தி சுவாமி

[8-ம் பக்கம் பார்க்க]

இன்றைய 'ஈழநாடு' யாழ். மாநகர குடிநல-சுகாதார வாரச்சிறப்பு இதழாக வெளிவந்துள்ளது

யாழ். மாநகர குடிநல-சுகாதாரவார

பரிசளிப்புவிழா

## இன்று நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாநகரசபையினரால் கொண்டாடப்பட்ட குடிநல சுகாதாரவாரத்தையொட்டி, 'ஈழநாடு' நடாத்திய கவிதை, கட்டுரைப்போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு இன்று மாலை யாழ். திறந்தவெளியரங்கில் பரிசு வழங்கப்படவிருக்கின்றது.

இப்பரிசளிப்பு வைபவத்துக்கும் கலைவிழாவுக்கும் மாநகரசபை விசேஷ ஆணையாளரும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான திரு. எஸ். முருகவேள் தலைமை தாங்குவார்.

யாழ். மாநகரசபை சார்பில் திரு. நா. சண்முகநாதன் (யாழ்வாணன்) தொகுத்த "எழில் மிகு யாழ்ப்பாணம்" என்ற நூலும் விழாவின் வெளியிட்டு வைக்கப்படும். யாழ். இலக்கியவட்டத் தலைவர் கவிஞர் வி. கந்தவனம் முதல் பிரதியை வாங்குவார்.

பரிசளிப்பு வைபவத்தைத் தொடர்ந்து நடைபெறும் கலைவிழாவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்ச்சி, செல்வன் நித்தியானந்தனின் இசைக்கச்சேரி, ராஜ் நகைச்சுவை நாடகமன்றம், வண்ணை கலைவாணி நாடகமன்றம் ஆகிய மன்றங்களின் நாடகங்கள் ஆகியவையும்இடம்பெறும்.

## பரிசுபெறும்சிறந்த உணவுச்சாலைகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாநகரசபை நடாத்திய குடிநல- சுகாதார வாரத்தையொட்டி யாழ்நகரின் உணவுச்சாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வருமாறு:-

சிற்றுண்டிச்சாலை

1. மலாயன்கபே
2. சுபாஸ்கபே

ஹோட்டல்கள்

1. சுபாஸ்விருந்தினர்விடுதி
2. கிராண்ட் ஹோட்டல்

பேக்கரி

1. 'சுபாஸ்பேக் ஹவுஸ்'
2. சிற்றிபேக்கரி

இந்த ஸ்தாபனங்களுக்கு இன்று மாலை யாழ். திறந்தவெளி அரங்கில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

## நைஜீரியப் பேச்சுவார்த்தைகள் தோல்வி

காம்பாலா, ஜூன் 1


உகாண்டா தலைநகரான காம்பாலாவில் நடைபெற்று வந்த நைஜீரிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துள்ளன.

பேச்சுக்கள் தோல்வியடைந்ததையடுத்து, பேச்சுக்களில் கலந்துகொண்ட கிழக்குநைஜீரிய 'பியாவ்ரா' கோஷ்டியினர், தமது நாட்டுக்குப் புறப்பட்டுள்ளனர்.

உண்மையான சமாதானத்துக்கு எப்போது சமஷ்டி நைஜீரியா தயாராகவிருக்கிறதோ, அப்போது தாமும் பேச்சுவார்த்தைகளைத் தொடர ஆயத்தமாகவிருப்பதாக 'பியாவ்ரா' கோஷ்டியினர் தெரிவித்துள்ளனர்.


நம் நாடே நம் வீடு — அதைப்பேணுதல் நம் கடன்

ஔவையார் வாக்குப்படி கந்தையானாலும் கசக்கிக் கட்டுங்கள். — சுத்தம் சுகம்தரும். பக்திக்கு அடுத்தது சுத்தம்.



மில்க்வைற் சோப்
மில்க்வைற் பார் சோப்



வாங்கிப் பாவித்து பயனடையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

வகுப்புகள்:
ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் விசேட சித்தி பெற கலை / விஞ்ஞான வகுப்புகள் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் காலை மாலை வேளைகளில் நடத்தப்படுகின்றன. சிங்கள ஆங்கில விசேட வகுப்புகளும் உண்டு. பெண்களுக்குப் பிரத்தியேகம். விபரங்களுக்கு:- யாழ். போதனு நிலையம், 15/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1329

வகுப்புக்கள்:
1968 ஆண்டு டிசம்பர் G. C. E. சோதனைக்கு விசேஷ வகுப்புகள் ஆ. ஆ. திட்டத்திற்குப் பயிற்சி சிங்களப் பாடத்திற்கு நடைபெறுகின்றன. காலையில் 8 மணி தொடக்கம் 280, கே. கே. எஸ். ரோட், 'மேல் மாடி'. பிற்பகல் 1 மணி தொடக்கம் நாக விகாரையில் போயா, போயா முன்தினம் காலையில் விசேஷ வகுப்புகள் நடைபெறுகின்றன. உடன் தொடர்பு கொள்க. அதிபர், ஸ்ரீ நாகவிகாரை, சிங்கள பாடசாலை. தொலைபேசி 7214. 1328

ஜி. சி. ஈ. சாதாரணம் விஞ்ஞானம் கலை வர்த்தகம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து தமிழில் ஆங்கிலத்தில் சிங்களம். தினசரி காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை. யாழ். கல்லூரி, 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 1333

மோட்டார் மெக்கனிசம் தினசரி பிற்பகல் மாலைவகுப்புகள். யாழ். கல்லூரி, 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 1334

### தேவை

தெல்லிப்பழை ஸ்ரீ ஜோதி வைத்தியசாலைக்கும் சத்திர சிகிச்சை நிலையத்துக்கும் ஒரு மருந்து கலப்பவரும் ஒரு வேலையாளும் பயிற்சிபெற்றது தேவை. தராதரங்களுடன், இருந்தால் அனுபவத்துடனும் ஜூன் மாதம் 10-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். டாக்டர் எஸ். குமாரசுவாமி. 1331

## தோட்டக்காவலாளரை வெட்டி திருட்டு

அளவெட்டி, சனி
தோட்டமொன்றில் களவாட வந்தவர்கள் தோட்டத்தைக் காவல் காத்துக்கொண்டிருந்தவரைவெட்டி விட்டு களவாடிச் சென்றுவிட்டார்களாம். இது சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றும் ஒருவர் தேடப்பட்டு வருகிறார்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளையென்பவர் சம்பவதினமிரவு தோட்டத்தில் காவலுக்காக தோட்டத்திலுள்ள குடிசையில் இருந்த சமயத்தில் கிணற்றடியிலிருந்த தண்ணீர் இறைக்கும் யந்திரத்தை யாரோ களவாடுவது போன்ற சத்தம் கேட்டு குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று பார்த்தபோது யந்திரத்தின் ஒரு பாகத்தை கழற்றுவதைக் கண்டு திருட முயன்றவரை பிடித்தபோது மற்றொருவர் கத்தியால் தோட்டக்காவலாளரை வெட்டிவிட்டு அந்தப் பாகத்தை திருடிக்கொண்டு போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகக் கணபதி என்பவரை சந்தேகத்தின்பேரில் காங்கேசன்துறைப் பொலிசார் கைது செய்து மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

மாஜிஸ்திரேட் மேற்படி நபரை பிணையில் செல்ல அனுமதித்து 8-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார். தலைமறைவாகத் திரியும் சாத்தி என்பவரை பொலிசார் தேடி வருகின்றனர்.

### ஆசிரிய பயிற்சி

பலாலி ஆசிரிய விசேட பயிற்சி விண்ணப்பப் படிவத்திற்கு 5 சதத் தபால் முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். வர்த்தக கல்வி நிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 1318

### விற்பனைக்கு

காணி
அச்சுவேலி வசாவிளான் வீதியில் கத்தோலிக்க பெண் பாடசாலை, தபாற்கந்தோர், சந்தை இவைகளுக்கு அருகாமையில் நாலு பரப்பு நல்ல காணி வீடுகட்ட வசதியுள்ளது. விபரங்களுக்கு: 43, மூன்றும் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1832

கோடைத் தக்காளி நாற்றுகள், விசேஷ பலன் தரும். அரசாங்கம் ஜாம் செய்ய வாங்குவது. ஆனி 15 வரை பெறலாம். தி. சபாரத்தினம், இருபாலைரோட், கோண்டாவில் கிழக்கு. 1330

கார்:
CL 547 A 40 தனிப் பாவிப்பு, உன்னத நிலை. போயா, போயாவுக்கு முந்திய நாட்களில் இல. 11, சின்னக்கடை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் பார்வையிடலாம். 1816

## உதவிக்குப் போனவருக்கு நேர்ந்த கதி

அளவெட்டி, சனி
வீதியில் ஏற்பட்ட வெட்டுக் காயங்களுக்குள்ளானவருக்கு உதவிசெய்யச் சென்றவரின் சைக்கிளை இனந்தெரியாதவர்கள் களவாடிச் சென்றுவிட்டார்களாம்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கந்தசாமி கனகராசா என்பவர் மாவிட்டபுரம் மதவடியில் நடைபெற்ற கலவரத்தில் காயப்பட்டவருக்கு உதவி செய்வதற்காகச் சைக்கிளை வீதியோரத்தில் வைத்துவிட்டுப் பின் வந்து பார்த்தபோது யாரோ இனந்தெரியாதவர்கள் திருடிச் சென்றுவிட்டதாகக் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார்செய்துள்ளார்.

களவாடப்பட்ட சைக்கிளைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

## 37 வருட சேவையின்பின் ஓய்வு

கொழும்பு சனி
கொழும்பு அர்ச் யோசெப் கல்லூரியில் போதனாசிரியராகக் கடமையாற்றிய திரு. வை. முத்துக்குமாரசாமி தமது சேவையிலிருந்து நேற்று இளைப்பாறினார், இவர் 37 வருடகாலம் ஆசிரியசேவை செய்துள்ளார்,

### அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

1. புலோலி மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கனகசபாபதியும்
2. மனைவி அன்னலட்சுமி
3. கணபதிப்பிள்ளை தம்பிராசா கணபதிப்பிள்ளை

வாதிகள்

இல. 9732

1. பருத்தித்துறை, புலோலி மேற்கைச் சேர்ந்த வல்லியப்பர் ராஜாவும்
2. மனைவி மனோன்மணி
3. சிவப்பிரகாசம் சுரேந்திரநாதனும்
4. மனைவி சரஸ்வதியும்

பிரதிவாதிகள்

1951ம் ஆண்டு பிரிவினைச் சட்டம் இல. 16இன் கீழ் 14 1/8 லாச்சம் வி. சி. கொண்ட அங்குடுமை என்னும் காணியில் பிரிவினை/விற்பனைக்கு இல. 9732 வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது. இதில், வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப் பகுதி, பருத்தித்துறைக் கோவிற்பற்றிலுள்ள புலோலி மேற்கு வென்றிப்பகுதேவன் குறிச்சியிலுள்ள கல்வீடும், சமையலறையும், கிணறும் வேறு தளபாடங்களும் கொண்டது 10 லாச்சம் வி. சி. 9, 18/32 குழி.

1968, ஜூன் மாதம் 18ம் நாள் கோட்டுக்கு வருமாறு மேற்படி வழக்கின் பிரதிவாதிகளுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது.

1968, மே மாதம் 22ம் நாள்.

கோட்டார் உத்தரவின்படி
ஒப்பம்:
எஸ். ஜே. நவரத்தினம்
காரியதரிசிக்காக.

தயாரித்தவர்:
ஒப்பம்: எஸ். ராசரத்தினம்
வாதிகளின் புறக்டர்.

802

## மல்லாகம் கி. ச. புதிய தலைவர்

குரும்பசிட்டி, சனி
மல்லாகம் கிராம சபையின் புதிய தலைவராக திரு. ஏ. எல். தாமோதரம்பிள்ளை தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மொத்தம் 17 அங்கத்தவர்களில் ஒருவர் சமுகமளிக்கவில்லை. திரு. தாமோதரம் பிள்ளைக்கு ஆதரவாக 11 வாக்குகளும் இவருடன்எதிர்த்துப் போட்டியிட்ட திரு. ஏ. சரவணமுத்துவுக்கு 5 வாக்குகளும் கிடைத்தன.

## விளம்பரம்

### நெல்லியடிப் பட்டினம்

#### கேள்வி விளம்பரம்

1968ம் ஆண்டு ஆனி மாதம் 16ந் திகதி முற்பகல் 10-30 மணி வரைக்கும், மேற்படி பட்டின விசேஷ ஆணையாளரால் கீழ்க்காணும் வேலைகளுக்கு, பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும், கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/-ம், பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்தியதன் பேரில் 15-6-68 பிற்பகல் 1-30 மணிவரை விசேஷ ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரத்தில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் யாவும் நெல்லியடிப் பட்டின விசேஷ ஆணையாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

க. முருகவேள்
விசேஷ ஆணையாளர்.

#### வேலைகளின் விபரம்

1. தாமரைக்குள வீதி திருத்தி அமைத்தல் — கல்லுப் பதித்தலும், தார் ஊற்றலும்.
2. ஆலங்கட்டை வீதி திருத்தி அமைத்தல் — கல்லுப் பதித்தலும், தார் ஊற்றலும்.
3. யாணுத்தறைஒழுங்கை திருத்தி அமைத்தல் — கல்லுப் பதித்தலும், தார் ஊற்றலும்.

விசேஷ ஆணையாளர்
அலுவலகம்,
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி. 31-5-68.

816

### நயினாதீவு கிராமசபை

#### கேள்வி விளம்பரம்

கிராமசபை சந்தை வளவில் கடைகள் அமைக்கும் வேலைக்கு கேள்விகள்கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள், கேள்விப்பத்திரப் பணம் ரூபா 100-00ம், பத்திரப் பணம் ரூபா 3-00ம் கட்டி 9-6-68 காலை 12 மணிக்கு முன் பெற்றுக் கொள்ளல்வேண்டும். கேள்விகள் 11-6-68 காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கும் கூட்டத்திலும், பதிவுத்தபால் மூலமும் குறித்த நேரத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல்வேண்டும். மேலதிக விபரங்கள் கிராமசபை அலுவலகத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்
சி. க. தம்பையா
தலைவர்.

கிராமசபை
நயினாதீவு.
31-5-68. 811

ஸிடன் தயாரிப்புகள்,

சி. டபிள்யு. ஈ. பிடவைகள், கைத்தறி பிடவைகள், உள்ளூர் மில் நைலோன், டக்கிரேன், மணிப்புரி, கிறேப் சில்க், றேயோன் பிடவைகள், றெடிமேட் உடுப்புகள் இங்கு நிதான விலைக்குப்பெற்றுக் கொள்ளலாம்.

ஸிடன் காமன்ஸ்

74 A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 330

சர்வ பூச்சி நாசினி "பொலிடோல்" E 605 M 50

மற்றும் நாசினி:
* மெற்றசிஸ் டொக்ஸ் * பொலித்தியோன் * அன்றக்கோல் * குப்பிருவிற் * டக்தல்

கிடைக்குமிடம்: புறோவின்ஷல் டிஸ்றிபியூட்டர்ஸ்
56, கந்தப்ப சேகரம் ஒழுங்கை, (ஒட்டோஸ் கட்டிடம்) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 244 628

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸில் காபந்து அரசாங்கம்

## 23-ந் திகதி பொதுத் தேர்தல்

### நெருக்கடி நிலைமைக்கும் இராணுவம் தயாராகவிருக்கிறது

பாரிஸ், ஜூன் 1

பிரான்ஸில், இம்மாதம் 23-ந் திகதி பொதுத் தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலம் வரை, அரசியல் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக, காபந்து அரசாங்கமொன்றைப் பிரெஞ்சு ஜனாதிபதி டி கோல் நியமித்துள்ளார். தற்போதைய பிரதமர் திரு. பொம்பாடு தலைமையிலேயே இவ்வரசாங்கம் நிறுவப்பட்டிருக்கிறது.

முன்னைய மந்திரி சபையிலிருந்து இரு மந்திரிகள் நீக்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் ராஜினாமாச் செய்யும்படி கோரிய உள்நாட்டு மந்திரி இவர்களில் ஒருவர். மற்றவர் நீதிமந்திரியாவார். நீதி மந்திரிப் பதவி, முன்னர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்த டி கோல் ஆதரவாளரும், இடதுசாரி ஒருவருமானவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நாட்டில், வேலைநிறுத்த நிலைமை சிறிது முன்னேற்றமடைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இரண்டு எண்ணை நிறுவனங்கள் தமது உற்பத்தியை மீண்டும் ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. மற்றும் பொறியியலாளர், தொழில் நுட்பாளர் சிலர், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஆனால், இடதுசாரித் தொழிற்சங்கத் தலைவர்கள் தமது கோரிக்கைகள் இணக்கும்வரை, வேலைநிறுத்தங்கள் தொடருமென அறிவித்துள்ளனர்.

**உஷார் நிலையில் இராணுவம்**

பாரிஸ் நகரில், தொடர்ந்து இராணுவம் காவல் புரிந்து வருகிறது. இன்று அல்லது நாளை, 'ரிசேர்வ்' படையினரைக் கடமைக்கு அழைக்கும் சட்டமொன்று பிறப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**டி கோல் ஆதரவு ஆர்ப்பாட்டங்கள்**

பிரெஞ்சு மாகாண நகரங்கள் பலவற்றில், புதிதாக டி கோல் ஆதரவாளர்களின் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. சில இடங்களில் டி கோலுக்கு எதிரான சிறிய ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுள்ளன. போட்டி ஆர்ப்பாட்டக்காரர்களிடையே அவ்வப்போது மோதல்கள் ஏற்பட்டபோதும், ஒருவரும் காயமடையவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிசார் தக்க சமயத்தில் வந்து நடவடிக்கை எடுத்ததன் மூலம், மோதல்களைக் கட்டுப்படுத்தினர்.

**தேர்தலுக்கு ஆயத்தங்கள்**

இதற்கிடையில், எதிர்வரும் தேர்தல்களில் தமது பலத்தைப் பரீட்சிப்பதற்கென இடதுசாரிக்கட்சிகள் தயார் செய்துவருகின்றன. தேர்தல்களில் தனியாகவே போட்டியிடுவது என்று கம்யூனிஸ்ட் கட்சி முடிவுசெய்துள்ளது. தேர்தலில், இடதுசாரிக்கட்சிகள் ஒன்றுபட்டு ஒரு பொதுத்திட்டத்தின் கீழ் போட்டியிடும் என்ற எண்ணங்கள், இந்த முடிவின் மூலம், வலுவிழந்துவிட்டன.

இத்தாலியில்

## மாணவர் ஆர்ப்பாட்டம்

ரோம், ஜூன் 1

இத்தாலியத் தலைநகரான ரோமில், பிரெஞ்சுத்தொழிலாளர், மாணவர்க்கு ஆதரவாக இடதுசாரிக்கட்சிகள் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தியுள்ளன. இந்த ஆர்ப்பாட்டங்களில் மாணவர்களே முக்கிய பங்குவகித்தனர்.

ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள், ரோமிலுள்ள பிரெஞ்சுத் தூதரகக் கட்டிடத்துக்குச் செல்ல முயன்ற போது, பொலிசாரால் தடைசெய்யப்பட்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த மாணவர்கள், பெட்ரோல் குண்டுகளை வீசியும், வழியில் நிறுத்தப்பட்டிருந்த கார்களைப் புரட்டிவிட்டு, அவற்றுக்குத் தீ வைத்தும் குழப்பம் விளைவித்தனர்.

ரோம் பல்கலைக்கழகம், மாணவர்களின் கைகளில் சிக்கியுள்ளது.

## பீஹாரில் வெப்பத்துக்கு மேலும் இருபது பேர் பலி

### உத்தரப்பிரதேசத்திலும் 20 பேர் மாண்டனர்

பட்னா, ஜூன் 1.

பீஹாரில் ஏற்பட்டுள்ள கடும் வெப்பத்திற்குமேலும் இருபதுபேர் பலியாகியுள்ளனர்.

இதற்குமுன்னர் பலியானோர் தொகை 78 என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

**உ. பியில் 20 பேர்**

உத்தரப் பிரதேசத்தில் 6பேர் ஏற்கனவே உயிரிழந்திருந்தனர். அங்கே மேலும் 20 பேர் வெப்பத்தில் மாய்ந்துள்ளனர்.

### பூத்தொட்டியில் நெல் விளைச்சல்

திருவனந்தபுரம், ஜூன் 1

கேரளத்து விவசாயி ஒருவர், பூத்தொட்டியில் நெல் விளைவித்துள்ளார்.

சுமார் 5,000 பூத்தொட்டிகளில் இவர் நெல் பயிரிட்டுள்ளார்.

பாரிஸில்

### வியட்னும் பேச்சுக்கள் முன்னேற்றம் இல்லை

பாரிஸ், ஜூன் 1

நேற்றுப் பாரிஸில், வட வியட்னும், அமெரிக்கப் பிரதிநிதிகள் சந்தித்து, வியட்னும் சமாதானம் பற்றிச் சுமார் 3 1/2 மணி நேரம் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். ஆனால், பேச்சுவார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. இருதரப்பினரும் சந்தித்துப் பேசுவது இது 6-வது தடவையாகும்.

வியட்னுமில் போரில் தீவிரத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளில் ஒத்துழைக்குமாறு வட வியட்னுமிடம் அமெரிக்கா விடுத்த கோரிக்கையை வடவியட்னும் நிராகரித்து விட்டது.

வியட்னும் சமாதானத்துக்கு முதல் நடவடிக்கையாக அமெரிக்கா, வடவியட்னும் மீதான குண்டு வீச்சை நிறுத்த வேண்டுமென்பதை வட வியட்னும் மீண்டும் வலியுறுத்தியது.

### மணிப்பூரில் கடும் புயல் இருவர் மரணம்

மணிப்பூர், ஜூன் 1

மணிப்பூரில் வீசிய கடும் புயலில் இருவர் உயிரிழந்தனர். மற்றும் பலர் காயமடைந்தனர். பல வீடுகள் இடிந்து விழுந்து விட்டன.

### பாண்டியர்கால சிற்பக்குகை

மதுரை, ஜூன் 31

மதுரைக்கருகில் பாண்டியர்காலசிற்பங்கள்கொண்ட ஒரு குகை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கி.பி. 8-ம் நூற்றுண்டைச் சேர்ந்த [illegible] பல சிற்பங்கள் [illegible]

## மே. ஆபிரிக்கக் குடியரசு செனகலில் ஊரடங்குச்சட்டம்

### பொலிஸ்-மாணவர் மோதலில் ஒரு மாணவர் சுட்டுக்கொலை

டாக்கார், ஜூன் 1

மேற்கு ஆபிரிக்கக் குடியரசான செனகலின் தலைநகர் டக்காரில் கலவரங்கள் ஏற்பட்டதையடுத்து, அங்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. துருப்புக்களும் தெருக்களில் அழைக்கப்பட்டுள்ளன.

பொது உடைமைகள் எவற்றுக்காவது தீ வைத்தோ, அல்லது வேறுவிதத்திலோ நாசப்படுத்தும் எவரையும், கண்ட இடத்திலேயே சுட்டுவிடுமாறு துருப்புகளுக்கு உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

பொது வேலை நிறுத்தம் ஒன்றுக்குத் தொழிலாளர் கோரியுள்ளதுடன், மாணவர்களும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளதே கலவரங்கள் ஆரம்பிப்பதற்கு காரணமென அறிவிக்கப்பட்டுள்ளது.

**மாணவர் கொல்லப்பட்டார்**

மாணவர்களும், பொலிசாரும் மோதிக்கொண்ட போது, ஒரு மாணவர் சுட்டுக்கொல்லப்பட்டார். மற்றும் 69 பேர் காயமுற்றனர்.

இந்த மோதலைத் தொடர்ந்தே, ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

## அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் சில திருத்தங்கள்

### ரஷ்யாவும் அமெரிக்காவும் அதிக ஆதரவு திரட்ட முயற்சி

நியூயோர்க், ஜூன் 1

தமது அணு ஆயுதப் பரவல் தடை நகல் ஒப்பந்தத்தில் சில திருத்தங்களைச் செய்ய அமெரிக்காவும், ரஷ்யாவும்முன்வந்துள்ளன.

ஐ. நா. பிரதான அரசியல் கமிட்டி விவாதத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நகல் ஒப்பந்தத்துக்கு அதிக அளவில் ஆதரவுதிரட்டும் நோக்கத்துடனேயே, இத்திருத்தங்களைச் செய்ய இரு வல்லரசுகளும் முன்வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

நகல் ஒப்பந்தத்தின் முன்னுரையில், புதிய பந்தி ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. ஐ. நா. சாஸன விதிகளுக்கமைய, சர்வதேச அமைதியைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு இப்பந்தி, அணுஆயுத உற்பத்தி நாடுகளையும், உற்பத்தியற்ற நாடுகளையும் ஒருங்கே கேட்டுக்கொண்டுள்ளது.

ஒப்பந்தத்தின் 6-வது பிரிவிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட வர்கள், இடாதவர்கள் இரு சாராரையும், அணுஆயுத உற்பத்தி நடவடிக்கைகளைக் குறைக்குமாறு அப்பிரிவு கோருகிறது.

## பெய்ரூட்டில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது

### முன்னாள் ஜனாதிபதி மீது கொலை முயற்சி

பெய்ரூட், ஜூன் 1.

தென் கிழக்காசியாவிலுள்ள குடியரசான லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில் மாலை தொடக்கம் காலைவரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஒரு 7-ம் பக்கம் பார்க்க]

## ஹவுரா ஆற்றில் படகு கவிழ்ந்து 11 பேர் பலி

கல்கத்தா, ஜூன் 1.

ஹவுரா ஆற்றில் படகு ஒன்று கவிழ்ந்ததன் விளைவாக அதில் பிரயாணம் செய்த 28 பேரும் நீரினுள் விழுந்தனர். இவர்களில், 17 பேர் காப்பாற்றப்பட்டனர்.

இதுவரை மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீதி எட்டுப் பேரின் சடலங்களையும் மீட்புக் கோஷ்டியினர் தேடி வருகின்றனர்.


இன்று அகில இலங்கை சித்த ஆயுள்வேத சங்க

37-வது ஆண்டு விழா

இடம்: லங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரி

காலம்: காலை 10 மணி முதல்

சிறப்புரை. ''சித்தர்களும் பாம்புக்கடியும்''

நாளை (3-6-68)

சிறப்புரைகள்:

[1] ''ஆயுள்வேத வைத்தியர் ஒழுக்க விதி''

[2] ''மானச ரோகம்''


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஒருவர் எவ்வளவு பாவமும் குற்றமும் செய்திருப்பினும், குருவருள் பெற்று உண்மையில் உள்ளத்தால் இறைவன் பெயரை ஒரு முறை சொன்னால், எல்லாப் பாவமும் நீங்கி புதுமனிதராவதுடன், மீண்டும் குற்றம் செய்யாதபடி மனமும் சுத்தமாகிவிடும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

[illegible] கீலகவருஷம் வைகாசி மாதம் 20-ந்திகதி (2-6-68)

## பிரான்சின் எதிர்காலம்

பிரான்சில் நடக்கவிருந்த இரத்தப் புரட்சியை அதிபர் ஜெனரல் டிகோல் தடுத்துவிட்டார் என்றே தோன்றுகிறது. ஆனால் தமது தலைமைக்கு வந்துள்ள ஆபத்தைத் தடுத்துவிடுவாரா என்பதை நிச்சயமாகச் சொல்லமுடியாது. எனினும் இன்னும் சில தினங்களுக்குள் பிரான்சில் எதுவும நடக்கலாமெனப்படும். எது நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை யென்பதும் நிச்சயம்.

கல்விக்கொள்கையில் மாறுதல் செய்யவேண்டுமென பிரான்சின் பிரபல சோபோர்ன் பல்கலைக்கழக மாணவர்கள் கிளர்ச்சி செய்ய அந்தக் கிளர்ச்சியை அடக்குவதற்குப் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததும் மாணவர் கிளர்ச்சி வலுப்பெற்றதுடன் அவர்களுக்கு ஆதரவாக ஆசிரியர்கள் முதல் சகலதுறைகளையும் சேர்ந்த சுமார் 80 லட்சம் ஊழியர்கள் பொது வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர். மூன்று வாரகாலத்துக்கு மதிகமாக நீடித்துவரும் இவ்வேலை நிறுத்தங்களினால் பிரான்ஸ் தேசமே ஸ்தம்பிதமடைந்து அரசியல் பொருளாதார நெருக்கடிகள் தலைதூக்கி அவல நிலையை அடைந்துள்ளது. ஆரம்பத்தில் வெறும் கிளர்ச்சியாகத் தோன்றியது, பின்னர் ஜெனரல் டிகோலின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான பெரும் கிளர்ச்சியாக மாறி ஆட்சியிலிருந்தே ஜெனரலை அகற்றும் புரட்சியாக உருவெடுத்தது. ஓய்வெடுத்துக்கொண்டிருந்த ஜெனரலை பத்துவருடங்களுக்கு முன்னர் மக்களே அழைத்துவந்து ஸ்திரமான ஆட்சி அமைக்கும் பொறுப்பை ஒப்படைத்தார்களென்பதும் மக்களின் சம்மதத்தைப் பெற்று படிப்படியாக சகல அதிகாரங்களையும் தம் வசம் எடுத்து சர்வாதிகாரியாக மாறியதுடன் பிரான்சின் தலைமையில் சக்திமிக்க ஐரோப்பாவை அமைத்துக்கொள்வதற்காக அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குங்கூட பல வழிகளிலும் தலையிடியைக் கொடுத்தவர் ஜெனரல் டிகோல். சகல அதிகாரங்களையும் மக்களே கொடுத்தாலும் ஹிட்லரின் போக்கில் அளவுக்கு மிஞ்சிய ஆதிக்கப்பாதையில் ஜெனரல் செல்லத் தொடங்கியதும் அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகிய நெருக்கடிகள் பிரஞ்சு மக்கள் மனதில் குமுறலை ஏற்படுத்தியிருந்தது. சந்தர்ப்பம்வாய்த்ததும் அவர்கள் எரிமலையாக வெடித்திருக்கிறார்கள்.

என்றாலும் எந்த எதிர்ப்பையும் சிறிதும் பதட்டமின்றி அமைதியுடன் எதிர்நோக்கும் நெஞ்சழுத்தங்கொண்ட ஜெனரல் டிகோல இன்று தோன்றியுள்ள நெருக்கடியைக்கண்டு அமைதியிழந்துவிடவில்லை யானாலும் பணிந்துபோகவேண்டுமென்பதை உணர்ந்துகொண்டார். இதனால்தான் கல்வியில் சீர்திருத்தம் செய்யவும் தொழிலாளருக்கு ஊதிய உயர்வு வழங்கவும் ஒப்புக்கொண்டிருப்பதுடன் மாணவரின் மற்றொரு கோரிக்கையையும் ஏற்று இப்பொழுது அமைத்துள்ள இடைக்கால மந்திரிசபையில் இதுவரை உள் விவகார மந்திரியாகஇருந்தவரைக் கைகழுவிவிட்டிருக்கிறார்.

சட்ட சபையைக் கலைத்துவிட்ட ஜெனரல் இம்மாதம் 23-ம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறுமென அறிவித்திருக்கிறார். சில விஷயங்களில் விட்டுக்கொடுத்திருப்பதுடன் பொதுத்தேர்தலுக்கும் நாள்குறித்துவிட்டதன்மூலம்தம்மை எதிர்த்தவர்களுக்கிடையில் பிளவையும் வேலைநிறுத்தத்தை நீடிக்கவிட்டதன் மூலம் ஊழியர்களின் மத்தியில் சோர்வையும் ஏற்படுத்தியிருக்கும் ஜெனரல் பொதுத்தேர்தலின் பின் மீண்டும் அதிபர் பதவிக்கு வருவாரா, வந்தாலும் சர்வாதிகாரியாக நீடிப்பாரா என்பதை இப்போதே சொல்லிவிட முடியாது. ஆனாலும் நாளொரு பிரதமரும் வாரமொரு மந்திரிசபையுமாக ஸ்திரமற்ற அரசியல் நிலவிய பிரான்சில் சென்ற பத்துவருடங்கள் ஸ்திரமான அரசியல் நிலையையும் பொருளாதார நிலையையும் ஏற்படுத்தியவர் ஜெனரல் டிகோல்தான் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. பிரெஞ்சுமக்களும் மறந்துவிடமாட்டார்கள். திடீர்ப் பொதுத்தேர்தலில் மக்கள், ஜெனரல் டிகோலுக்குப் பதிலாக வேறொரு ஸ்திரமான அரசாங்கத்தை தெரிவுசெய்துவிட முடியுமெனவும் எதிர்பார்ப்பது கஷ்டம். ஜெனரல் டிகோல் மீண்டும் அதிகாரத்துக்கு வருவாரென்றும் ஆனால் அவருக்கு இன்றுள்ள சகல அதிகாரங்களையும் மக்கள் அளிக்கமாட்டார்களென்றும் எதிர்பார்க்கலாம். ஆனால் குறைந்த அதிகாரங்களுடன் பதவியிலிருக்க அந்த ஜெனரல் விரும்புவாரா?

## தம்பிரான் சுவாமிகள் மதுரை செல்கிறார்

கோப்பாய், சனி

ஸ்ரீ மத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஜூன் மாதம் 7ந் திகதி மதுரை செல்லவிருக்கிறார். மதுரை ஆதீன குருமகாசன்னிதானத்தின் அழைப்பையேற்று செல்லும் சுவாமிகள் அங்கு நடைபெறும் ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள் விழாவில் சொற்பொழிவாற்றவிருக்கிறார்கள்.

## உற்சவம்

துன்னாலை, சனி

வடதுன்னை அல்லைப்பெற்றான் சிவசுப்பிரமணியர் கோவில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. இம்மாதம் 9ந்திகதி தேர்த்திருவிழாவும், 10-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## இன்றைய பலன்

[2 - 6 - 68]

வைகாசி மீ 20 உ

ஞாயிற்றுக்கிழமை

திதி - ஷஷ்டி, இரவு 6-56 மேல் ஸப்தமி.

நட்சத்திரம்- ஆயிலியம், மாலை 5-44 மேல் மகம்.

ராகுகாலம் - 4-22 — 5-52.

சுபநேரம் - 8-52 — 10-22.

இன்று பிறந்தவர்களுக்கு — இவ்வாண்டு இன்பமும் துன்பமும் கலந்த சமயோகமான காலமாகும். புதிய துறையில் முதலீடுசெய்வதைத் தவிர்க்கவும். தொழிலாளர்களுக்கு உற்சாகமிருப்பினும் ஊதியம் பாதிக்கபபடும். குடும்ப வாழ்க்கையில் சிறிது சலனம் ஏற்படலாம். கலைஞர்களுக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும். குழந்தைபொன்றின் உடல்நலம் உங்கள் கவனத்தைப் பெறும், கவலைப்பட வேண்டியதில்லை.

மேஷம்- கடமையில் பாராட்டு, இளமையின் விழாக்கோலம்.

ரிஷபம்- புத்திரர்புகழ், புதுமையில் நாட்டம்.

மிதுனம்- தொழில் கவலை, தொல்லைகள் பெருகும்.

கடகம்- மக்கள் பிணி, மனப்போராட்டம்.

சிம்மம்- திடீர் திருப்பம், இரவியஇலாபம்.

கன்னி- தடைகள் தாக்கும், தாமதமிகுதி.

துலாம்- அறிவுக்கு விருந்து, ஆராய்ச்சியில் ஆர்வம்.

விருச்சிகம்; இதயப் பூரிப்பு. இன்பத்தில் சாயல்.

தனுசு- அன்னியவாசம், அகாலபோசனம்.

மகரம்- தென்றல் வீசும், தேன் சொட்டும் வாழ்வு.

கும்பம்- பொருள் விரயம, பொல்லாங்கு கேட்டல்.

மீனம்- குறிக்கோளில் வெற்றி, குருவிசுவாசம்.

# யாழ். நகரின் எதிர்கா[லம்]

இருபதாம் நூற்றாண்டு மனிதன் தன் கற்காலச் சந்ததிகள் சீவித்த அதே பூமியில் மேற்பரப்பிற்றான் வசிக்கின்றான். ஆனால் கற்கால மனிதனுக்கோ மிருகங்கள் முதலியனவிடமிருந்து பாதுகாப்பதற்கு சுற்றி மறைப்புகளும், மழை, வெய்யில் முதலியனவற்றிலிருந்து காப்பாற்றுவதற்கு கூரையுமே தேவைப்பட்டது. அவன் கூட்டாகச் சேர்ந்து வாழமுயலும் பொழுதே கிராம வாழ்வு ஆரம்பமானது.

ஆனால் இக்கால மனிதன் திட்டமிட்டு செயலாற்றுகின்றான். இவ்விஞ்ஞான யுகத்தில் அவன் அளப்பரிய சக்தியை உண்டாக்கி சகல வசதிகளும் பொருந்திய இடங்களை கடலின் ஆழத்திலும், நிலத்துக்குக் கீழும் அமர்த்தி வசிக்க முற்படுகிறான். அன்றியும் செய்மதியை வானில் ஏற்றி, வான்மதி தானி மற்றைய கிரகங்களுக்கும் குடியேறத் திட்டமிட்டிருக்கிறான். எலக்ரோனிக் கருவிகளும், ஜெற் விமானங்களும் காலத்தையும் நேரத்தையும் மிகச் சுருக்கிவிட்டதோடு தூரத்தையும் விரைவில் சேரவைத்துவிட்டது. அகில உலக மக்கள் எல்லாரும் முன்னேறும் பொழுது நாம் யாழ்.மக்கள் மட்டும் ஓரேநிலையாக இருக்கமுடியாது.

ஒரு நகரம் அதில் வசிக்கும் மக்களது அறிவியல் பெருக்கத்தினதும், பண்பாட்டினதும் பிரதிபலிப்பாக விளங்கும். அன்றியும் அந்நகரத்தினது பொருளாதார, ஆன்மிக முன்னேற்றத்தையும் கணிக்கக்கூடியதாகவும் விளங்கும். சரியானபடி திட்டமிட்டு நிர்மாணிக்கப்படாத நகரம், நெருக்கமுள்ளதாகவும். பாழடைந்த பழமையை உடையதாகவும் அகற்றப்படவேண்டிய பல அம்சங்கள் நிறைந்ததாகவும் இருக்கும்.

இப்பொழுது யாழ்நகரமானது நகர நிர்மாணத்திற் பிரகாரம் திட்டமிடப்பட்டு, விரிவு அடையவில்லை. காலகதியில் ஏதோ வசதிக்கேற்றவிதமாக ஒவ்வொருவரின் தனிப்பட்ட அபிலாசைகளுக்கு ஏற்றமாதிரி விரிந்து அமைந்துள்ளது. கரையூர், பாஷையூர், நாவாந்துறை, பழையபள்ளி, புதியபள்ளி முதலிய வட்டாரங்களில் பெருகிவரும் ஜனப் பெருக்கம் பெரிய இடவசதியீனப் பிரச்னையை உண்டுபண்ணுவதாக இருக்கின்றது. சாலைவசதி, வீட்டுவசதி, சுகாதாரவசதி, மின்சாரவசதி, பூங்கா, விளையாட்டுத் திடல்கள், நீர்வசதி, சாக்கடை வெளியேற்ற வசதிகள் முதலின பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஈடாக பெருகவில்லையென்றே கூறலாம். இவையெல்லாம் திட்டமிடப்பட்டு அபிவிருத்தி செய்தாலேயொழிய மக்கள் மக்களாக ஜீவிக்கக்கூடியவாறு அமையாது.

யாழ். மாநகர சபையின் அபிவிருத்திக்கென புறம்பாக ஓர் நகரநிர்மாணத்துறை அமைக்கப்படல் வேண்டும். இந்நகரத்தில் உள்ள நெடுஞ்சாலைகள், குறுக்குவீதிகள், ஒழுங்கைகள் முதலியன ஒருவரையோடு இல்லாமலும், பெரும் போக்குவரத்துச் சாதனங்களால் இடையூறில்லாமல்மக்கள் நடமாட முடியாதவாறும், என்றும் ஐம்பது வருடகாலப் பெருக்கத்துக்கு ஈடுகொடுக்கக்கூடியதாகவும் அமையவில்லை. இந்த நிர்மாணத்துறைப் பகுதியின் செயலாற்றும் அம்சங்கள் கீழ்க்கண்டவாறு இருக்கலாம்.

1. நகரப்பகுதிகளை திருப்பி அளவிடுதல். சாலை அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல். தயாரித்த திட்டங்களை அமுல் செய்தல்.
2. வீடமைப்புத் திட்டங்கள் தயாரித்தலும் அமுல் செய்தலும்.
3. நிர்மாணித்த திட்டப்படி அமைக்கப்படாத சாலைகள் வீடுகளுக்கு சட்டப்படி நடவடிக்கை எடுத்தல்.
4. போக்குவரத்துச் சாதனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல். அதனால் ஏற்படும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு திட்டமிட்டுச் செயலாற்றல்.

### நிர்மாணத் திட்டம்

பொதுவாக நகர நிர்மாணச் சிற்பிகள் நகரத்தைப் பிரிக்கும்பொழுது தொழிற் பகுதி, கடைப் பகுதி, குடிசனப் பகுதி, அலுவலகப் பகுதி முதலிய பலவாகப் பிரிக்கிறார்கள். இவ்வமைப்பில் சில இடங்கள் தொழில் செய்யும் நேரம் முடிந்தவுடன் ஓர் மனித சஞ்சாரமற்ற இடம்போல் தோற்றமளிக்கக் கூடியதாகவும், குடியிருக்கும் தூர இடங்களுக்கு குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர் சென்று வரவேண்டியதாகவும் இருக்கின்றது. இப்படிப் பாகுபாடு செய்வதில் புதிய உத்வேகத்தை பிரயோகித்து, கண்டபாட்டிற்கு மழைக்கு முளைக்கும் காளான்களைப்போல் மாடிவீடுகளும், தொழிற்சாலைகளும் வராமல் திட்டமிடப்படவேண்டும்.

இவ்வபிவிருத்தி நிர்மாணத் திட்டத்தில் பொதுமக்கள் தங்கள் ஓய்வு நேரத்தைக் கழிக்கக் கூடிய பூங்கா, விளையாட்டுத் திடல்கள், நீச்சல் தடாகங்கள், தாமரைக் குளங்கள், நகரை அலங்கரிக்கும். நீர் ஊற்றுக்கள் முதலியன முக்கிய அம்சமாக மிளிரவேண்டும். ஒவ்வொரு வெளியான இடத்திலும் வீடு கட்டுவதற்கு ஏற்ற இடங்கள் எல்லாம் இடக்கட்டுப்பாடும், ஜனப்பெருக்கக் கட்டுப்பாடும் உரியனவாக இருக்கவேண்டும். உதாரணமாக கரையூர்ப்பகுதியில் அரைப் பரப்பில் சிறிய வீடுகள் கட்டி பத்து, இருபது ஆட்கள் வசிக்கின்றார்கள். இதை அனுசரித்து நடந்தால் எங்கள் சமூகம் ஓர் முன்னேற்றமான வலுவுள்ள ஆற்றல் நிறைந்ததாக அமையமாட்டாது. ஓர் நலிந்த சமுதாயமாகவே விரியும்.

— இ. வயித்தியலிங்கம் —
பி எஸ். ஸி; இன்ஜி; ஏ. எம். ஐ. [சி.]
ஏ. எம். ஐ. இ. சி.

### குறைந்த வீடமைப்புத் திட்டங்கள்

குறைந்த வீடமைப்புத் திட்டங்கள் மத்திய அரசாங்க உதவியுடனோ அல்லது கட்டிடக் கட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ அமைத்து மக்களுக்குக் கொடுக்கலாம். நகரை மேற்குப் பகுதியில் கல்லுண்டாய்ப் பக்கமாகவும், வடக்குப் பகுதியில் கோண்டாவில் பக்கமாகவும், கிழக்குப்பகுதியில் அரியாலைப் பக்கமாகவும் விஸ்தரித்து வீடுகளை அமைக்கலாம். அடுக்குமாடி வீடுகள் கட்டுவது விசேஷ அம்சமாக அமையலாம்.

### தண்ணீர்ப் பிரச்னை தீர வழி

அடுத்தபடியாக நன்னீரே யாழ்ப்பாணத்தின் முக்கிய பிரச்னையாக உள்ளது. தற்பொழுது நகரின் முக்காற்பங்கு உப்பு நீர் உடைய இடங்களாகவே இருக்கின்றது. ஜனப்பெருக்கமுடைய கரையோரப் பகுதியில் நகரத்தில் கால்பகுதியளவிற்கு நன்னீர். திருநெல்வேலிக் கிணற்றிலிருந்தும், கொண்டாவில் கிணற்றிலிருந்தும், நிலைபக் கம்பக் குழாய் மூலமாகவும், சில வீடுகளுக்கு குழாய்மூலமாகவும் கொடுக்கப்படுகின்றது. நகரம் முழுவதற்கும் நீர் விநியோகம் செய்வதற்கு இந்த இடங்களிலிருந்து எடுக்கும் நீர் போதாது. இதற்கு இரணைமடுக்குளத்திலிருந்துபெரும் குழாய் மூலம் நீர் இங்கு கொண்டுவரலாம். இரணைமடுவுக்கு மகாவலி நீரை அதன் தேவைக்கு ஏற்ற மாதிரி சேர்த்துவிடலாம்.

ஆழமான குழா[ய்]... கள் மூலம் இ... எடுப்பதற்காக... பட்ட ப... கீழுக்கு உப்பு... தாகவும், ... றுத்திட்டங்க... தென்றும் இ... ணர்கள் கூற... ஆனால் யாழ்... பெய்யும் ஒவ்... மழைநீரும் ... செல்லாதவாறு... அல்லது நில... அழுக்கத்தினால்... வைக்கவேண்டு... அபிப்பிராயப்... கள். ஆனபடி... ருள்ள குளங்... பிரசாதமாக ... கின்றன. இ... கப்பட்டு நீர் ... படவேண்டு...

### சாக்கடை வெளியேற்[றம்]

அடுத்தபடியா... மானது சாக்க... யேற்றம். வாழி மக்... அநேகமாக உ... ஒவ்வொரு நா... வதில் மா... ஒவ்வொரு வ... லாயிரக்கணக்... செலவா... யும் இ... இது அநாகரீக... மாகக் கருத... நீர் அடைப்பு... களும், நச்ச... கொண்ட ... களும் ஒரு... துள்ளார்கள்... சாக்கடை ... திட்டம் ஒன்... கப்படவில்லை... அடியில் செ... விடினும், பல... தேவைப்படினு... வரும் நகர... அத்தியாவசிய... ருகும். ... மூன்றுவிதமாக... லாம்.

1. மக்கள் ... வாழும் பகுதி... அடைப்புக்குழி... முடியாமல் ... உயரமாக உள்... லும் பொதுவ... அமைக்கப்பட...
2. எவ்வேலை... உள்ளதோ ... இடங்களில்... தடைக் கு... கூடங்கள் ... லேயே ... வேண்டுமென... ப்பந்திக்கப்ப...
3. பின்தங்கி... லும் மக்கள் ... குளிகள், நச்ச... கள் கட்ட வச... ளிடத்தும், ... முற்பணம் கொ... விக்கலாம். ... சிலவருடங்கள்... அறவிடலாம்.

இறுதியாக ... ஆனந்தத்தை... வசதியையும் ... கையையும் உ... ஒரு ...திட்டத்தி... கும். ...தற்கு ... மை...ட்டு ... தற்... உரிய... வ... லும்பிர... க...சார ... ஓ... விளையா... ச... விளையா... ளம் ஒட்டல், ... கள் முதலிய... ஒருமைப்பாட்... குகின்றன. ... கவனம் எடுத்... எல்லாப்பகுதி... பெறுவதற்கு ... படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ல நிர்மாணம்

**அழகுநகராக்க உதவவேண்டும்**

பண்ணைக் கடலும், சிறு தீவுகளும், யாழ். பழைய கோட்டையும் சரியாக அபிவிருத்தி செய்யப்பட்டால் அந்நிய நாட்டவருக்கு சிறந்த பொழுதுபோக்குக்கு உரிய இடங்களாக மாற்றலாம். இப்படிப்பட்ட இடம் அமெரிக்காவில் இருக்குமேயானால் இதை ஒரு சுந்தர நகரமாக மாற்றி இருப்பார்கள். எங்களுக்கு எங்களுடைய அழகைப்பற்றித் தெரியவில்லை. பல நாட்டவர்கள் முக்கியமாகத் தென்னிந்தியாவிலிருந்து வருபவர்கள் கூட இதில் லயித்து இன்பம் பெறக்கூடிய இயற்கை அழகும், செயற்கை அழகும் கூடியதாக ஆக்கலாம். ஓர் நவீன விடுதியும், நீச்சல் தடாகங்களும் வள்ள ஓட்டங்கள் செய்யக்கூடியதுமாகவும் அமைத்தால் அதனால் நல்ல வருமானத்தை எதிர்பார்க்கலாம். இங்குள்ள சனசமூக நிலையங்கள், குடிநலச் சங்கங்கள், சமூகசேவை நிலையங்கள் முதலியன இதில் முக்கிய பங்கெடுத்து இந்நகரமக்களுக்கு தேவையான நலன்களைச் செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அன்றியும் யாழ். நகர் ஓர் அழகு நகரம் என அமைவதற்கு யாழ்வாசி ஒவ்வொருவரும் உதவ வேண்டும்.

## அழகு வாய்ந்த யாழ். நகர்

(துளசிதாசன்)

**யாழ். நகரகுடிநல-சுகாதார வாரத்தையொட்டி 'ஈழநாடு' நடத்திய கவிதைப் போட்டியில்பரிசுபெறும்ஒரேயொருகவிதை இது:**

**யாழ்நகரின் சிறப்பு**

அமுதினை நிகர்த்த தமிழினை வளர்த்த
ஆன்றோர் அமைத்த நகரம்
கமழ்கின்ற சைவ நெறிதோம்பு வேந்தர்
கண்போன்று காத்த நகரம்.
அழியாத தமிழர் புகழ்நாக ரீகம்
அகத்தேகொண் டுள்ள நகரம்
எழில்வாய்ந்த ஈழ வடபூமி யாக
இலங்கும்யாழ்ப் பாண நகரம்.
எழிலான மேனி புதிதாக நித்தம்
ஏற்கும்யாழ் நங்கை யிவளின்
அழகான அணிகள் பலவாகும் அந்த
அழியாத காட்சி காண்பாம்.

**வேறு**

அழகொழுகு நகரசபை மண்ட பத்தோ
டருமைமிகு நூல்நிலையம் அகழி சூழ்ந்த
பழையதொரு வலிமைமிகு கோட்டை நோய்தீர்
பணிமனைகள் பக்தர்தொழும் ஆல யங்கள்
கலைமலிந்த பீடங்கள் கற்றோர் கூடிக்
கருத்தாயும் மன்றங்கள் கண்ணை யீர்க்கும்
இளமைதவழ் சோலைகளென் றிவ்வா றாக
எழில்கொஞ்சும் யாழ்நகரை ஏத்து வோமே

**வேறு**

துணிமணிக் கடைகள் நீண்டு
தொடர்ந்தன; தூய தங்க
அணிகலன் விற்போர் வீதி
அகன்றழ கூட்டி நிற்கக்
கணிப்பிட முடியா வேறு
கடைகளும் சந்தை யெல்லாம்
அணிசெயும் யாழ்ந கர்ப்பேர்
அணங்கெழில் என்ன சொல்வேன்.

**வேறு**

அகன்றபல வீதிகளை யமைத்து மிக்க
அழகூட்டி யொளியூட்டி அழுக்கு நீரை
அகற்றநிலத் துட்பலவாம் வாய்க்கால் வெட்டி
அவற்றையெலாம் ஒன்றோடொன் றிணைத்துச் சேரு
சுகநியற்ற நோய்க்கிருமிக் கிடமில் லாத
சுத்தமும் காற்றோட்ட வசதி யுள்ள
நகராக யாழ்நங்கை கொலுவி ருக்கும்
நற்காட்சி கண்களுக்கோ ரின்ப மன்றோ.

**மேன்மேலும் எழிலூட்ட....**

மேன்மேலும் யாழ்நங்கைக் கழகை யூட்ட
மேல்நாட்டைப் பின்பற்றி நகர மெங்கும்
தேன்சிந்தும் பூங்காக்கள் நிறுவ ராடும்
சிறந்தவிளை யாட்டரங்கம் அமைக்க
வேண்டும்
கால்தோறும் குப்பைகொட்டல் ஒழிதல்
வேண்டும்
கக்கூசு வசதிபல செய்தல் வேண்டும்
வான் தோயும் மாளிகைகள் ஆன போதும்
வாழ்வுவை ஏற்றவையாய்க் கட்ட
வேண்டும்.

**தொல்லையில்லாத யாழ்நகர்**

படம்பார்க்கச் செல்வோர்க்கு மூட்டைத்
தொல்லை
பக்கத்தில் இருக்கின்றோர் புகைக்கும்
தொல்லை
நடமாடு பிச்சைக் காரர் தொல்லை
தலைவுண்டிச் சாலையில் இல்லாத் தொல்லை
இடமிருந்த போதிலுமே வரிசை விட்டு
இடித்தெறிந்து 'பஸ்'ஏறு கின்றோர்
தொல்லை
கடுகளவும் இல்லாத அழகு வாய்ந்த
கவின்சிந்து யாழ்நகரை ஆக்கு வோமே

## 'அழகுவாய்ந்த யாழ்நகர்' போட்டி

### இன்று பரிசு பெறுபவர்களும் பரிசுப்பொருள் உதவியவர்களும்

யாழ். மாநகர குடிநல - சுகாதார வாரத்தையொட்டி 'ஈழநாடு' நடத்திய 'அழகுவாய்ந்த யாழ்நகர்' கவிதை கட்டுரை போட்டி முடிவுகள் சென்றஞாயிற்றுக்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்திருந்ததை வாசகநேயர்கள் அறிவார்கள்.

கவிதை - பொதுப்போட்டியில் சிறந்ததாகத் தெரிவுசெய்யப்பெற்ற கவிதையை இயற்றிய அல்வாய் வடக்கு 'துளசிதாசன்', கட்டுரை பொதுப்போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட கட்டுரையை எழுதிய கொழும்புத்துறை சுவாமியார் வீதியைச் சேர்ந்த திரு. மு. கனகசபை, 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் பரிசுக்குரிய கட்டுரையாகத் தெரிவுசெய்யப்பட்ட கட்டுரையை எழுதிய யாழ். இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் த. ஸ்ரீகாந்தா ஆகிய மூவருக்கும் இன்று மாலை யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

கவிதைப்போட்டியில் சிறந்த கவிதையாகத் தெரிவுசெய்யப்பட்ட கவிதையை இயற்றியவருக்கு 50 ரூபாய் பெறுமதியான நூல்கள் பரிசளிக்கப்படுகின்றன. இதற்கான தொகையை யாழ்ப்பாணம் கன்னாதிட்டி பிரபல நகைவியாபாரியான திரு. செ. கதிரவேலு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்.

சிறந்த கட்டுரைக்கு வழங்கப்படும் 50 ரூபாய் பெறுமதியான நூல்களுக்குரிய தொகையை உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மனமுவந்து வழங்கியிருக்கிறார்.

19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் பரிசுக்குரிய கட்டுரைக்கு 25 ரூபாய் பெறுமதியான நூல்கள் வழங்கப்படுகின்றன.

**இது கலைவாணி புத்தகநிலையத்தினரின் அன்பளிப்பு**

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

வருமானமும் அதிகரித்துள்ளதாயும், இங்கு வந்துள்ள ''திருக்கோவில்'' ஆசிரியர் முருகவேள் கூறுகிறார். அப்படிக் கோவிலுக்குச் செல்லுபவர்கள் அறிவில்லாதவர்களா? அமைதியற்ற மனதுக்கு கோவில்களைவிட்டால் வேறு எங்கு இந்த அமைதி கிடைக்கமுடியும். சினிமாவுக்குச் சென்று படம்பார்த்தால், சிறிது நேரம் நம்மை மறந்து இன்பமடையலாம் தான். ஆனால் படம் பார்த்து முடிந்த பின்னர் என்ன?

கோவிலுக்குச்சென்று வழிபட்டாலோ அங்கு மெய்மறப்பதுடன், புதிய நம்பிக்கையும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. சமூகமே அங்கு திரளுவதால், சமூக ஒற்றுமையும் நன்மையும் ஏற்படவாய்ப்பளிக்கின்றது. கோவில் கொண்டுள்ள இறைவன் பெயரால், சமூகத்துக்கு எவ்வளவோ நன்மை செய்யமுடியும். முன் காலத்தில் அவ்விதமே நடந்ததாயும், இப்போதும் தமிழகத்தில் சில கோவில்களில் அன்னதானம், இலவசப் பால்தானம், பிள்ளைகளுக்கு மதியபோசனம் முதலிய நடப்பதாக ஆசிரியர் முருகவேள் தெரிவிக்கிறார். இங்கு ஒவ்வொரு கோவிலிலும், சமூகநன்மைக்கான ஏதாவது காரியம் நடந்தால், கோவில்கள் புத்துயிர் பெறுவதுடன் சமூகமும் சுபீட்சமடையும். கோவில்களுக்கு அதிக மக்கள் வருவர்.

சென்னை மைலாப்பூர் கபாலீசுவரர் கோவிலுக்கு இப்போது 300 வீடுகளுக்கு மேலுள்ளனவாம். வாரிஸ் இல்லாதவர்கள், கோவிலுக்குத் தங்கள் வீடுகளையும் சொத்துக்களையும் எழுதி வைத்துவிடுகிறார்கள். அந்த வருமானம் சமூகத்திலே மக்களுக்குப் பயன்படுமென்ற நம்பிக்கைதான் இதற்குக் காரணம். பொதுவுடமையான நமது கோவில்களைத் தக்கபடி பயன்படுத்தினால், குறைவிலாது உயிர்கள்வாழ வழிபிறக்குமல்லவா? சம்ய... கள்... கொண்டதும் அமைதி... மறக்கூடியதுமான ...

சாங்கத்தைவிட, என்றும் நிலைத்து, ஊருக்கே பொதுவான கோவில்கள் மூலம் நம் சமூகத்துக்கு அதிகமான அன்புத் தொண்டுகளைச் செய்யமுடியாதா?

ஃ ஃ ஃ

நிலை பெறுமாறு எண்ணு
தியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானு
டைய கோவில் புக்கு,
புலர்வதன் முன் அல
கிட்டு மெழுக்குமிட்டுப்
பூ மாலை புனைந்
தேத்திப் புகழ்ந்து
பாடி,
தலையாரக் கும்பிட்டு
கூத்துமாடி சங்கரா
சய போற்றி போற்றி
என்றும்,
அலை புனல்சேர் செஞ்
சடை எம் ஆதி
யென்றும் ஆரூரா என்
றென்றே அலறு நில்லே.

— அப்பர் சுவாமிகள்

## இரு மந்திரிகளுக்கு சிறை

ஜாகர்த்தா, ஜூன் 1

முன்னைநாள் இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோவின் ஆட்சிக்காலத்தின்போது மந்திரிகளாகப் பதவி வகித்து வந்த இரு மந்திரிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார சீர்கேட்டுக்குக் காரணமாக இருந்தார்களென்ற காரணத்தினால் முன்னைநாள் தகவல் அமைச்சர் ஒருவருக்கும் முன்னைநாள் கூட்டுறவு அமைச்சர் ஒருவருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

---

சங்கானை, சனி

சண்டிலிப்பாயில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே மரணமடைந்த கணபதிப்பிள்ளை தம்பிஐயா மரணம் சம்பந்தமாகப் பொலிசாரால் தேடப்பட்டுவந்த சந்தேக நபரான பி. தம்பிராசா என்பவர் சங்கானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## ஐயாறன் எழுதுவது

'கார் அனுப்பியிருக்கிறேன். வா உடனே புறப்பட்டு' என்று ஓர் அவசரக் கட்டளை நேற்றுக் கிடைத்தது. அனுப்பியது யார் தெரியுமா? திருநெல்வேலி ஸ்ரீதலங்காவற் பிள்ளையார்!

ஆமாம். வருஷம் சுமார் பத்தாகியும் இதுவரை அக்கோவிலுக்குச் செல்லவில்லை. அவன் அருளாலே தானே அவன் தாள் வணங்க முடியும்?

இதிகாசத்திர முக்கியம் வாய்ந்த ஒரு புராதன கோவில். சங்கிலி மன்னன் ஆண்ட காலத்திலே, தலத்தைக் காப்பதற்காக நான்கு புறமும் நான்கு பிள்ளையார் கோவில்களை அமைத்திருந்தாராம்!

அங்கு சென்ற போது மேள தாளங்கள் முழங்க, சங்காபிஷேகத்துக்கான ஏற்பாடுகளெல்லாம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன. இது மேற்குப் பார்த்த சந்நிதி. கிழக்குப் பிராகாரத்திலே சென்ற வருஷம்தான் சனீஸ்வர மூர்த்தியின் புதிய கோவிலுக்குக் கும்பாபிஷேகம் நடந்தது. செல்வி புஷ்பா செல்வநாயகம் அவர்கள் இக்கோவிலைக்கட்டி கும்பாபிஷேகம் செய்ததைப்பற்றி அச்சமயம் இப்பத்தியில் எழுதியிருந்ததாக ஞாபகம்.

அக்கோவிலிலும் வருஷாபிஷேகத்தை முன்னிட்டு சங்காபிஷேகம். வசிஷ்டரைப்போல், ஓம மந்திரங்களை எல்லாம், ஏட்டுச்சுவடியிலிருந்து, சிவன் கோவில் குருக்கள் சொல்லிக்கொண்டிருக்க, மற்றொரு குருக்கள் ஓமம் செய்துகொண்டிருந்தார். பிள்ளையார் கோவிலிலும் ஏககாலத்தில் சங்கு பூசையும் அபிஷேகங்களும் நடந்தன. பல பக்தர்கள் வந்து தரிசித்தார்கள்.

சற்று நேரம் மெய்மறந்து இன்புற்றேன். கோவில் குருக்கள் அன்புடன் தமது ருசிகரமான கதையைச் சொன்னார். 40 வருடகாலமாக அவர் அக்கோவிலில் பூசை செய்துவருகிறாராம். கோவில் பழுதடைந்து, மூலஸ்தானமும் ஆட்டங்கண்டதும், அவர் பிள்ளையாரிடம் தான் முறையிட்டாராம். 'சுவாமி! இவ்வளவு காலமாகப் பூசை செய்துவருகிறேன். பாலஸ்தாபனமாகி கும்பாபிஷேகம் எப்போது நடத்திக்கொள்ளத் திருவுளமோ' என்று வேண்ட, கனவிலே அவர் வந்து 'ஆவணி மாசம் கும்பாபிஷேகம் நடக்கும்' என்று உறுதி சொன்னதாயும் அந்தப் புண்ணிய வதி புஷ்பம் வந்து தானே இதை நடத்திவைப்பதாக பொறுப்பு ஏற்றுக்கொண்டு அவ்விதமே கும்பாபிஷேகம் நடத்திவைத்ததாயும், சனீஸ்வரர் கோவிலையும் கட்டியதாயும் கண்ணீர் ததும்ப, இரு கைகளையும் கூப்பிக்கொண்டே ஸ்ரீசண்முகநாதக் குருக்கள் சொன்ன கதை உள்ளத்தை உருக்குவதாக இருந்தது.

ஃ ஃ ஃ


சங்காபிஷேகம், ஓமம், கும்பாபிஷேகம், திருவிழா எல்லாம் வீண்செலவென்றும், மூடநம்பிக்கையென்றும், சில ''பகுத்தறிவாளர்'' கருதலாம். ஆனால் இதற்காகும் செலவெல்லாம், இங்குள்ள ஏழைகளுக்குத்தான் செல்லுகின்றன. கோவில்களை வைத்து எவ்வளவு எளிய குடும்பங்கள் பிழைக்கின்றன.

கோவில்களுக்கு அதிகமான மக்கள் தமிழகத்திலே இப்போது வருவதாயும்,

(9-ம் கலம் பார்க்க)




# சட்டக்கல்லூரி தமிழ் மன்ற முத்தமிழ் விழா



திரு. செ. விவேகானந்தன் [மன்றத் தலைவர்] திரு. காங்கேசு பத்மநாதன் [செயலாளர்]

சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டப் புறப்பட்ட கடிப்புமிகு தமிழ் இளைஞர்களை தமிழ் அன்னையின் புகழ்பாட 2-6-68-ல் கொழும்பு மாநகரில் முத்தமிழ்விழா எடுக்கின்றனர். இத்தமிழ்மன்றம் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், கே. வி. சண்முகநாதன் போன்ற தமிழபிமானம் மிக்க அன்றைய சட்டக் கல்லூரி மாணவர்களால். சட்டம் பயில்றிடும் தமிழன்னையின் தவப்புதல்வர் தம்தாய் மொழியில் கொண்ட ஆர்வம், அறிவுத்திறன் முதலியவற்றை வளர்க்கும் பணியின்மூலம் தமிழன்னைக்கு தம்மாலியன்ற பணி புரிய வேண்டுமென்னும் பெருநோக்குடன் உருவாக்கப்பட்டது.

சட்டக் கல்லூரியில் சிங்கள. தமிழ், முஸ்லிம் இன மாணவர்கள் உள்ளபொழுதிலும் அனைவரின் ஆதரவையும், நன்மதிப்பையும் பெற்று விளங்கும் இம்மன்றம் 2 6-68-ல் 3-வது முத்தமிழ்விழாவைக் கொழும்பில் மிகவும் சிறப்பாக நடாத்துகிறது.

திரு. செ. வே. விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் உயர் நீதிமன்ற நீதியரசராகக் கடமையாற்றும் ஒரேயொரு தமிழரான திரு. சிவசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

—குமார்

**போட்டி—1**

**முடிவு திகதி: 5-6-68**

**அடுத்தவாரம் முடிவு வெளியாகும்.**

## பொறுக்கிய முத்து



சத்தியம் என்கின்ற வலுவான அத்திபாரத்தின்மேல்தான் உலகம் நிற்கிறது. அசத்தியம் என்பது இல்லாதது. ஆகையால் அதன்வெற்றிக்கே இடமேயில்லை. சத்தியம் நிலைநிற்பது. அதை அழிக்கவேமுடியாது.

-மகாத்மா காந்தி

## தெரிந்து கொள்ளுங்கள்!

இத்தாலியிலுள்ள பெயர் போன எரிமலையின் பெயர் யாது?—விசூவியஸ்

கிராமபோனை முதன்முதல் உண்டாக்கியவர் யார்?—தோமஸ் ஆல்வாஎடிசன்.

1928-ல் ஒரு கிராம் இரேடியத்தின் விலை என்ன?—14,440 பவுண்.

ஸ்டாலினுக்கு முந்திய சோவியத் ரஷ்யத் தலைவர் யார்?-- லெனின் நிக்கோலை

உலகத்தின் பெரிய கட்டிடம் எங்குள்ளது? அது எத்தனை மாடிக்கொண்டது?-- அமெரிக்காவிலுள்ளது 102 மாடிகள்.

அனுப்பியவர்:
மு. க. இரகுநாதன்
(அ. இல. 26.)

## தொடர் கட்டுரை
# ஒரு படி உயர்வோமா

கணேஷ்

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து.
—குறள்.

இதய அடித்தளத்தில் குடியிருக்கும் குரல் கொப்பளிக்கிறது. எதிர்கால நமது சமுதாயம் இன்னும் பல படிகள் உயர வேண்டும் என்ற தணியாத அடங்காத பேராசை அந்த எண்ணம்தான் இதை எழுத தூண்டுகிறது.

உலக வேகமாற்றத்தின் வளர்ச்சிக்கு நாம் நம்மைத் தகுதியுடையவர்களாகத் தயார்படுத்திக் கொள்ளவேண்டாமா?

### காத்திருக்கின்றன

நீள் கடலும் நெடுவானமும் நமக்காகக் காத்திருக்கின்றன. ஓடும் நதியும் ஓயாது வீசும் காற்றும் நமக்காகக் காத்திருக்கின்றன. வான்மழையும், வளர்நிலமும் நமக்காகத்தான். உதயசூரியனும் குளிர்நிலவும் நமக்காகத்தான். ஒளிநட்சத்திரங்களெல்லாம் நமக்காகத்தான் பிரகாசிக்கின்றன. பனிமலையும் பாய்ந்தோடும் ஆறும் நமக்காகக் காத்திருக்கின்றன. தேடியவற்றை யெல்லாம் தர அவை காத்துக்கிடக்கின்றன.

### நமது வேலை

திரைகடலோடித் திரவியம் தேடவேண்டிய பொறுப்பு நம்முடையது. அலைகடந்து மலைகடந்து அப்பால் என்ன இருக்கிறதென்பதைக் கண்டுபிடிக்கவேண்டியது எமது வேலை. தேவையானவற்றையெல்லாம் அது எங்கெங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் சென்று ஆய்ந்து எடுத்து வெற்றிகொள்வது நமது பொறுப்பு. முயற்சியின் வேகத்தில் தான் முடிவு தங்கியிருக்கிறது.

'தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதன் மெய்வருத்தக்கூலிதரும்.'

வள்ளுவர் அறிவுறுத்துவது நமக்காகத்தான்.

'கட்டுகளை உடைப்போம்
எங்கள் கைவலி உள்ள மட்டும்'

என்று சுத்தானந்த பாரதியார் கூறியதும் எங்களுக்காகத்தான். எனவே கைகளை மிக்க வலிமையாக்கிக்கொண்டு நம்பிக்கையுடன், தைரியத்து

(3-ம் கலம் பார்க்க)

[5-ம் கலத் தொடர்ச்சி]

டன், நெஞ்சு நிறைந்த உறுதியுடன்நாம் இப்போ திருக்கும் நிலையிலிருந்து இன்னும் ஒரு படி உயரமாக்கிக் கொள்வோமா? மலர்ச்சி நிறைந்த புதிய உலகம் உருவாக்குவதில் நாமும் நம்மாலான பங்கை செலுத்த விரைவோம், வேகம் கொள்வோம்.

[தொடரும்]

## 'மாணவர்மலர்' அங்கத்தவர் பத்திரம்

பெயர்: ______________

வயது: ______________

பாடசாலை: ______________

முகவரி: ______________

______________

வகுப்புஆசிரியர் கையொப்பம்

## ரஷ்ய விண்கலம்

மாஸ்கோ, ஜூன் 1

சோவியத் ரஷ்யா, மற்றுமொரு விண்வெளிக் கலத்தை அனுப்பி வைத்துள்ளது. இது 'கொஸ்மோஸ்-222' என அழைக்கப்பட்டுள்ளது.

## உடுவில் கி. ச. தலைவர் தெரிவு

உடுவில், சனி

உடுவில் கிராமசபையின் புதிய தலைவர் தெரிவு ஜூலை முதற் பகுதியில் நடைபெறவிருக்கின்றது.

இக்கிராமசபையின் 12 வட்டாரங்களுக்குமான தேர்தல் அண்மையில் நடைபெற்றது.

## 4-ந் திகதிவரை விளக்க மறியல்

குரும்பசிட்டி, சனி

சன்னாலை வாசி கே தம்பி ஐயாவின் கொலைசம்பந்தமாக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மற்றொரு நபரான பி. துரைராசா என்பவர் மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது சந்தேக நபரை 4-ந் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.


## வாசனைத் திரவியங்கள்

* கோவில் அபிஷேகம்
* திருவிழாக்கள்
* திருமண வைபவங்கள்

மற்றும் எல்லா வைபவங்களுக்கும் தேவையான யந்திரத்தினால் சுத்தமாக தயாரித்த

# வாசனைச் சந்தனம்

மற்றும்
மயில் மார்க் சந்தன வில்லைகள்
சந்தன முகப்பவுடர்
சுகந்த சந்தனப்பவுடர்
கேசரிப் பவுடர்
ஜவ்வாது பவுடர்
மற்றும்
வாசனைத் திரவியங்களும்
மலிவான விலைகளில்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். றோட்.
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

"பாலேந்திரா பில்டிங்",
160, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068

போன்: 438

## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

420, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.

O லங்கா சலு சல ஸ்தாபனத்தாரின் புடவைகளுக்கு
பிரதான விநியோகஸ்தர்கள்.

O தேசிய லொத்தர் சபையினரின் ரிக்கற்றுகளுக்கு
பிரதம அமைப்பாளர்.

O இலங்கை புகையிலைக் கம்பனியாரின் சிகரற்றுகளுக்கு
வடபகுதி விநியோகஸ்தர்கள்.

O மலிபன் பிஸ்கோத்து, தங்காலு தேயிலை, கன்சோல் சொக்கிலேற் முதலியவைகளுக்கு
விநியோகஸ்தர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய கல்வி எங்குகொண்டுபோகுமோ?

## உப சபாநாயகர் கேட்கிறார்

உடுப்பிட்டி சனி

இக்கல்லூரி உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள சகல பாடசாலைகளிலும், விளையாட்டிலும், கல்வி கலைத்துறையிலும் முதலிடம் வகிப்பது பெருமையூட்டுகிறது. இக் கல்லூரியின் பல மாணவர்கள் இன்றுபெரிய பதவிகளை வகித்து வருகின்றனர்.

இதற்கு மூலகாரணம் அரசாங்கத்தின் இலவச கல்வித் திட்டமேயாகும். இத்திட்டம்தான் திறமையுள்ள வறிய பிள்ளைகளையும் முன்னுக்கு கொண்டுவந்தது.

இவ்வாறு உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி.யுமான திரு மு. சிவசிதம்பரம் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் 14-வது வருடாந்தப் பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'இன்றைய புதிய கல்வித் திட்டம் ஒரு தெளிவுபடுத்த முடியாத நிலையில் இருக்கின்றது- இத்திட்டம் இலங்கையின் கல்விநிலையை எங்கே கொண்டுபோய்விடுமென்பதையும் ஊகிக்கமுடியாமலுள்ளது. ஆகவே தமிழராகிய நாம் மிக விழிப்புடன் இருக்கவேண்டும்.

கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சினித்தம்பி பேசுகையில்:

இன்றைய கல்விநிலையில் பெற்றோர்— ஆசிரியர்களுக்கிடையே நெருங்கியதொடர்பு ஏற்படவேண்டும். அதிலது பிள்ளைகளை வழிநடத்துவது இயலாத காரியம். பிள்ளைகளின் கல்விவளர்ச்சியைக் கருதிப் பெற்றார் அடிக்கடி தனிப்பட்டமுறையில் ஆசிரியர்களைச் சந்தித்துத் தமது பிள்ளைகளின் குறைகளை நிவர்த்தி செய்ய முயலவேண்டும் என்றார்.

மாணவர் சபைத் தலைவர் செல்வன் எஸ். தர்மரத்தினம் நன்றி கூறினார்.

---

## பெய்ரூட்டில்......

[3ம் பக்கத் தொடர்ச்சி]

வர்மீது நடந்த கொலை முயற்சி வழக்கைத் தொடர்ந்தே. இவ்வூரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தெருவில் வைத்து ஒரு நபர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். ஆனால் அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டார். சிறிய காயங்கள் மட்டுமே அவருக்கு ஏற்பட்டன.

---

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வல்வெட்டித்துறை வேவில் விநாயகர் கோவில் வருடாந்த உற்சவம் நேற்று நடைபெற்ற கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமானது. இம்மாதம் 6-ம் திகதி பூங்காவனமும், 9-ந் திகதி தேர் உற்சவமும், 10-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 2-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 கூதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 8-00 திரைகானம், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் அல் 49 மீற்றர்**

பகல் 12-00 தொழிலாளர் நிகழ்ச்சி, 1-00 மாதர் விருப்பம்.


**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 கானமஞ்சரி, 6-45 பாவளம், 7-00 கிறிஸ்தவநிகழ்ச்சி, 7-30 பட்டாடு—ஐ. வேலுப்பிள்ளை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை — என். கே. பத்மநாதன்.

சித்த ஆயுள்வேத வைத்தியர்களின்
ஆலோசனைக்கு அமையத் தயாரிக்கப்பட்ட
குளிகைகள், மாத்திரைகள், செந்தூரம்
மற்றும் ஆசவம், அரிஷ்டம் தைலம்,
லேகியம், எண்ணை வகைகள்
நீங்கள் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.
வடமாகாணத்தின் சிறந்த ஆயுள்வேத மருந்துக்கடை
கு. செ. கணபதிப்பிள்ளை அன்சன்ஸ்
51, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

கவர்ச்சியான இழை
நீடிய பாவிப்பு
சொகுசான ஓட்டம்
உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
ஆகியவற்றுக்கு
உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்
நோர்தேண்
இன்டஸ்ட்ரீஸ்
டயர் நிரப்புபவர்கள்
8/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்
AGENTS
றேயல் டிஸ்பென்ஸறி
PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உலக சமாதானத்துக்கு கல்வியை பயன்படுத்துங்கள்'

## மாணவர்களுக்கு கனேடிய தூதர் அறிவுரை

யாழ்ப்பாணம், சனி

'மாணவர்கள் கல்லூரியில் தாம் பெறும் அரிய கல்வியை உலக சமாதானத்துக்காக, அமைதிக்காக பயன் படுத்த வேண்டும். பசிப்பிணியையும் வறுமையையும் ஒழிக்கப் பயன் படுத்த வேண்டும்'.

இவ்வாறு இலங்கையிலுள்ள கனேடிய தூதர் திரு. ஜோன் திம்மர்மான் நேற்று மாலை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

திரு. திம்மர்மான் மேலும் பேசுகையில் கூறியதாவது:- விஞ்ஞான வளர்ச்சி துரித கதியில் நடந்துகொண்டிருக்கிறது. காலத்தின் பெருமையை நாம் நன்குணர்ந்து நடந்து கொள்ளவேண்டும். மாணவர்கள் தமது சக்திகளை, திறமைகளை ஆக்கப் பணியில் செலவிடவேண்டும்

கல்லூரியில் பெறும் உயர்ந்த கல்வி, நிறைந்த அனுபவம் இவையெல்லாம் பிறருக்கும் பயன்படத்தக்க வகையில் மாணவர் உழைக்க முன்வரவேண்டும். அப்போதுதான் அவர்களது வாழ்வும் சமுதாய வாழ்வும் உயர்ந்து சிறக்கும்.'

சென். ஜோன்ஸ் கல்லூரியின் பலதுறை வளர்ச்சிதம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளதாகவும் திரு. திம்மர்மான் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. கே. பூரணம்பிள்ளை தமது அறிக்கையில், சேவை மனப்பான்மையுடன் கல்லூரியைச் சேர்ந்த சகலரும் உழைத்து வருவதாகவும் பெருமைக்குரிய வர்களைத் தோற்றுவிக்கும் தமது கல்லூரியும் தனது பங்கைச் செலுத்திக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

திருமதி ஜே. திம்மர்மான் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

# 'தமிழகத்தில் ஆஸ்திகம் அதிகரித்துள்ளது'

## 'திருக்கோவில்' ஆசிரியர் திரு. முருகவேள் கருத்து

யாழ்ப்பாணம், சனி

''கோவில்கள் முன்னர் சமுதாய நல நிலையங்களாகவும் [சோஷியல் வெல்பேர் சென்டர்] கலைகளை வளர்க்கும் கழகங்களாகவும், நாடக மன்றங்களாகவும், தொழில் தரும் நிறுவனங்களாகவும், போர்க் காலத்தில் படை வீடுகளாகவும், பல்வேறு கலைகளை வளர்க்கும் பல்கலைக் கழகங்களாகவும், விளங்கி வந்திருக்கின்றன. இப்போதும் தமிழகத்திலே சில கோவில்களின் ஆதரவின் கீழ் விடுதிகள், சித்த வைத்திய சாலைகள், கலைக் கல்லூரிகள் முதலியன நடக்கின்றன.'' என்றிவ்வாறு 'சேக்கிழார் விழா'வில் கலந்து கொள்ள இங்கு வந்துள்ள 'திருக்கோவில்' ஆசிரியர் திரு. முருகவேள் கூறினார்

தமிழகத்தில் ஆஸ்திகம் பெருகுவதாயும் திருவிழாக்களுக்கு கூட்டம் அதிகம் வருவதாயும், கோவில் திருப்பணிகள், கும்பாபிஷேகம் கோவில் வருமானம் முதலியன வரவர அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

பல பிரமுகர்கள் விமான நிலையத்தில் இவரை மாலை சூட்டி வரவேற்றனர்.

# பஸ்ஸுக்காக காத்து நின்றவருக்கு கத்திக்குத்து

அளவெட்டி, வெள்ளி

யாழ்ப்பாணத்திற்கு செல்ல பஸ் தரிப்பு நிலையத்தில் காத்து நின்ற செல்லையா என்பவர் கத்தியால் குத்தப்பட்டதைத் தொடர்ந்து காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த அமரசிங்கம் செல்லையா என்பவர், பிரதான வீதியிலுள்ள மருவடி பஸ் தரிப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு காத்து நிற்கும்போது, இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சாணேசர் துரையன், தம்பையா நடேசு, தம்பையா தங்கராசா ஆகிய மூவரும் தன்னைத் தாக்கி, கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்தியதாக காயமடைந்தவர் காங்கேசன் துறை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் சம்பந்தமாக பொலிஸார் சந்தேக நபர்களை தேடி வருவதோடு, புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

---

கொழும்பு, வெள்ளி

சென்ற பெரும்போகத்துக்கென விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடனை வசூலிப்பதில் தீவிரமுயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாம். 5 கோடி 50 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கப் பட்டதாகவும் இதில் ஒரு கோடி 50 லட்சம் வசூலிக்கப்பட்டுவிட்டதாகவும் உணவு விவசாய அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நெசவு நிலையம்

திருக்கோணமலை, சனி

நெசவு தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கும், வேலையற்றிருக்கும் பெண்களுக்குமாக திருகோணமலை அபிவிருத்திச்சங்கம் நெசவுநிலையமொன்றை நடாத்திவருகிறது.

---

## நேர்முகப் பரீட்சை

சுழிபுரம், சனி

ஆண் தாதிகளுக்கான நேர்முகப் பரீட்சை இவ்வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடை பெறவிருக்கின்றது.


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
முத்துராமன் நாகேஷ்
நடிக்கும்
முகூர்த்தநாள்

MANOHARA
JAFFNA
Daily: 4-45, 7-00 & 9-45 P.M.
Antony Perkins
Janet Leigh
PSYCHO
(Adults Only)

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ
நடித்த
நான் யார் தெரியுமா?

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Sean Connery
in
FROM RUSSIA WITH LOVE


## சுந்தரரின்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் அவர் பின்வந்த சமயாசாரியார்களும் அடியார் புகழையும் பாடினார்கள். தமிழ்நாடு 1500 ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலையில் சமண சமயமே சைவ சமயத்தை அழிக்கக்கூடியதாக வேகமாகப் பரவி வந்தது.

சேக்கிழார் வாழ்ந்த காலம் ஒரு பொற்காலமாகும். இக் காலத்திலேயே சைவம் தழைக்கத் தொடங்கியது. இதற்குக் காரணம் அப்போது அரசாட்சி செய்த இரண்டாம் குலோத்துங்கனும், மற்றும் அரசர்களும் சைவர்களாக இருந்ததே.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவிகள், அளவை இசைக்கலைமன்ற மாணவர்கள், யாழ் இந்து மகளிர் கல்லூரிமாணவிகள், ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி மாணவர்கள் ஆகியோரின் திருமுறைஓதுதல், விழா ஆரம்பத்தில் நடைபெற்றது.

சேக்கிழார் மன்றச் செயலாளர் புராணபடனத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் புராணபடனம் ஆறுமுகநாவலரின் முதாதையர் காலத்திலிருந்தே இங்கு வழக்கத்திலிருந்துவருகின்றதென்றும், இந்தியாவில்கூட புராணபடனம்இங்குநிகழ்த்தப்படுவது போலஇல்லையென்றும் குறிப்பிட்டார். புலவர் த. குமாரசாமிப் பிள்ளை குழுவினராலும், திரு. செ. கதிரேசர்பிள்ளை குழுவினராலும் புராணபடனம் நிகழ்த்தப்பட்டது.

---

## வெள்ளை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியினர் பொலிசாரிடம் அனுமதிகோரியிருக்கின்றனர்.

இம்மாதம் 8-ந் திகதி வெள்ளை அறிக்கைமீது சபையில் விவாதம் ஆரம்பமாகும் போதும் எதிர்க்கட்சியினர் சபையிலிருக்கமாட்டார்களென்றும் விவாதத்தை அவர்கள் பகிஷ்கரிப்பார்களென்றும் அறியப்படுகிறது.

அரசாங்கசேவைக் குமாஸ்தாக்கள் சங்கம் உட்பட சகல தொழிற் சங்கங்களின் உதவியையும் ஒத்துழைப்பையும்பெற்று மாவட்ட சபைகளுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்க்கட்சியினர் முயற்சி செய்வதாகவும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

## செம்பியன்பற்று கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம் சனி

செம்பியன்பற்று கிராம சபைத்தேர்தலில் 11 வட்டாரங்களிலும் 24 அங்கத்தவர்கள் போட்டியிட்டனர். மூவர்போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

இரு அங்கத்தவர்கள் ஒரு வாக்கும் பெறுமல் கட்டுப் பணத்தை இழந்தனர். தேர்தல் முடிவுகள் வருமாறு:—

முதலாம்வட்டாரம்: எஸ். ஐயாத்துரை 98, கே கந்தன் 00[ எஸ் நடராசா 88.

இரண்டாம் வட்டாரம்: பி ஞானப்பிரகாசம் 118, தி வரப்பிரகாசம் 88.

மூன்றும் வட்டாரம்: வி குலசைப்பிள்ளை போட்டியில்லை

நான்காம் வட்டாரம்-எஸ் முத்தையா 59, வி சுப்பிரமணியம் 56

ஐந்தாம் வட்டாரம்: வி செகராசா 38, வி சின்னத்தம்பி 27.

ஆறும் வட்டாரம்: வி சின்னத்துரை 56. வி செல்லத்துரை 54, வி கிலையா 2.

ஏழாம் வட்டாரம்: ஏ சின்னையா 95, எம் சுப்பிரமணியம் 73.

எட்டாம் வட்டாரம்: வி சதாசிவம் [போட்டியில்லை].

ஒன்பதாம் வட்டாரம், 116, ஏ ஐ ஐயம்பிள்ளை 67.

பத்தாம் வட்டாரம்: எஸ் வேலுப்பிள்ளை [போட்டியில்லை].

பதினொராம் வட்டாரம்: எஸ் குலசேகரம் 101, எஸ் சற்குணம் 67, எஸ் சண்முகம் 34, எஸ் சின்னப்பு42, எஸ் வேலுப்பிள்ளை 00.

[ந. தி.

---

உடுப்பிட்டி, சனி

கரவெட்டி நுணுவிற் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 9, 10-ம் திகதி தேர், தீர்த்தத்துடன் முடிவடையும் விசேட பிரசங்கங்களும் நடைபெறும்.

## ஆளும்கட்சிக் கூட்டத்தில்

இம்மாதம் 5-ந்திகதி காலை ஜனப்பிரதிநிதிகள் சபைக் கட்டிடத்தில் அரசாங்கப் பார்லிமெண்டரி குழுக் கூட்டம் நடைபெறுமென்றும் அக்கூட்டத்தில் மாவட்ட சபை வெள்ளையறிக்கையை பிரதமர் சமர்ப்பித்துப் பேசுவாரென்றும் தெரிகிறது.


சென்னையில் 100 நாட்களுக்கு ஓடிய சிறந்த வள்ளுவ காவியம்!
கெப்பிட்டல்
(கொழும்பு)
2-00, 6-00, 9-30
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-30
'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' — இதற்கு நீங்கள் சொல்லப்போகும் பதில்
மக்கள் திலகம்
எம். ஜி. ராமச்சந்திரன்
சரோஜாதேவி
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
பேபி ஷகிலா
தங்கவேலு
நடித்த
ஸ்ரீ முத்துக்குமரன் பிக்சர்ஸ்
அளிக்கும்

பெற்றால்தான் பிள்ளையா?
டைரக்ஷன்: கிருஷ்ணன்-பஞ்சு


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org